**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

OS.144/2023

பெயர் : மும்தாஜ் பேகம் (DW3) (Cross )

த/க/பெ. :

தேதி : 27.01.2026

ஆஜராகி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

முதல் பிரதிவாதிக்கு வாதி 2006 ல் வாதி செட்டில்மெண்ட் செய்து கொடுத்தார் திரும்பவும் அந்த சொத்தை கேட்பதால் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். முதல் பிரதிவாதிக்காக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். முதல் பிரதிவாதிக்கு 2 வது திருமணம் வாதிக்கு 3 வது திருமணம். முதல் பிரதிவாதிக்கு முதல் திருமணம் ஆகி ஒரு மகன் உள்ளார். வாதி என் கணவரின் அண்ணன். என் மாமனாரின் முதல்தாரத்து மகன். நான் திருமணமாகி 45 ஆண்டுகாளக இதே ஊரில் தான் வசித்து வருகிறேன். திருமணத்திற்கு முன்பு நான்முஸ்லிம் மதத்திற்கு மாறி உள்ளேன். அப்போதிலிருந்து வாதியுடன் எனக்கு பேச்சு வார்த்தை இல்லை என்றால் சரிதான். வாதி பிரான்சில் இருக்கிறார் வேலை செய்கிறாரா என்பது தெரியவில்லை. அவருக்கு முதல் திருமணம் பிராசில் நடந்தது. ஒரு மகள் இருப்பதாக சொல்லி இருக்கிறார். வாதிக்கும் முதல் பிரதிவாதிக்கும் ஜமாத்தில் பேச்சு வார்த்தை நடந்ததா என்றால் பல முறை நடந்து. இருவருக்கு ஒத்து போகவில்லை. அதில் என்ன முடிவெடுத்தார்கள் என்பது தெரியாது. திருக்கலாச்சேரி மற்றும் காரைக்கால் இரண்டு ஜமாத்தும் சேர்ந்து தான் பேசினார்கள். இந்த சம்பவம் நடந்து 2, 3 ஆண்டுகள் இருக்கும். அதற்கு முன்பு பிரச்சனை இருந்தது. 2 வருடங்களாக பிரிந்து இருக்கிறார்கள். தாாவ சொத்து வாதி பூர்வீக சொத்தா என்றால் அவர் தனியாக வாங்கியது. தாவா சொத்தை முதல் பிரதிவாதி பெயரில் எழுதி வைத்த விபரம் தெரியுமா என்றால் தெரியாது. முதல் பிரதிவாதி முதல் திருமணம் மூலம் பிறந்த தற்போது காரைக்காலில் இருக்கிறார் அடிக்கடி வந்து அவரது தாயாரை திருக்காலச்சேரியில் பார்த்து செல்வார். வழக்கு சம்பந்தமாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.